செ.வெ.எண் :22/செப்டம்பர் நாள்: 12.09.2019

# இராமநாதபுரம் மாவட்டம்

## உயர்கல்வி/தொழிற்கல்வி பயிலும் முன்னாள் படைவீரர்களின் வாரிசுதாரர்கள் கல்வி உதவித் தொகைக்கு விண்ணப்பிக்கலாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப.,அவர்கள் தகவல்.

**பாரத பிரதமர் கல்வி உதவித்தொகை:**

2019-2020-ம் கல்வியாண்டில் B.E., B.Tech, BDS, M.B.B.S., B.Ed., BBA, BCA, B.Pharm, B.Sc Nursing, BPT, LLB, MCA, MBA, B.V.Sc., B.Sc Agri, B.B.M., B.S.c, Bio Tech., B.F.Sc., B.Arch, B.Sc Science போன்ற ஏனைய பல தொழிற்கல்வி பயில கல்லூரிகளில் சேர்ந்துள்ள முதல் ஆண்டு பயிலும் முன்னாள் படைவீரர்களின் மகன், மகளுக்கு மாண்புமிகு பிரதம மந்திரியின் கல்வி உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக பூர்த்தி செய்து உரிய இணைப்புகளுடன் online-ல் அனுப்பி வைக்குமாறு புதுதில்லியில் உள்ள மைய முப்படை வீரர் வாரியத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க வேண்டிய இணையதள முகவரி www.ksb.gov.in

2019-2020 ஆண்டில் பாரத பிரதமரின் கல்வி உதவித்தொகை உயர்த்தப்பட்டு முன்னாள் படை வீரர்களின் பெண் வாரிசுகளுக்கு பிரதி மாதம் ரூ.3,000/- (ரூ.36,000/- ஆண்டுக்கு) ஆண் வாரிசுகளுக்கு பிரதி மாதம் ரூ.2,500/- (ரூ.30,000/- ஆண்டுக்கு) வழங்கப்படுகிறது. இவ்விண்ணப்பத்தினை ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க இயலும். 2019-2020-ம்ஆண்டில் முதலாம் ஆண்டு தொழிற்கல்வி பயிலும் முன்னாள் படைவீரர்களின் வாரிசுகளுக்கு மட்டுமே பொருந்தும். ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க கடைசி நாள்:15.11.2019 ஆகும்.

**தொகுப்புநிதி கல்வி உதவித்தொகை:**

2019-2020-ம் கல்வியாண்டிற்கு இளநிலைபடை அலுவலர்கள் மற்றும் இதர தகுதியுடைய முன்னாள் படைவீரர்களுக்கு தொழிற்கல்வி, தொழில்நுட்பக்கல்வி, தொழிற்பயிற்சி கல்வி மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்விகளுக்கு தொகுப்பு நிதியிலிருந்து கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2019-2020-ம் ஆண்டில் தொகுப்பு நிதி கல்வி உதவித்தொகை இணையதளம் வாயிலாக விண்ணப்பம் செய்து அதன் நகலினை இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம். இவ்விண்ணப்பத்தினை ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க இயலும். இணையதள முகவரி : edu.exweletutor.com/eduscholarship

எனவே, தொழிற்கல்வி பயிலும் தங்களது மகன்/மகள்களை 2019-2020-ம் கல்வியாண்டில் கல்லூரியில் சேர்ந்துள்ள இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் அதிக அளவில் விண்ணப்பித்து பயன்பெறலாம். மேலும் விபரங்களுக்கு மாவட்ட முன்னாள் படைவீரர்கள் நல துணை இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**